# மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,விருதுநகர் மாவட்டம் (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்

**முன்னிலை திரு.S.J. சக்கரவர்த்தி,B.A., B.L.,………தலைவர்**
**திருமதி.M.முத்துலட்சுமி,M.A.,B.L.,...உறுப்பினர்**

## 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் நாள்
## C.C. No.222/2022

S. காசிவேல்,
த/பெ. சங்கரலிங்கம்,
24/3, நேதாஜி 3வது தெரு,
MDR நகர் கிழக்கு,
சொக்கலிங்காபுரம்,
அருப்புக்கோட்டை - 626 101. …புகார்தாரர்

**-எதிர்-**

1. டாக்டர். M. சம்பத்குமார்,
Medical Council Registration No. 40461,
மணிமலர் மகப்பேறு மருத்துவமனை,
வைரமுத்து நாடார் தெரு,
அருப்புக்கோட்டை - 626 101.

2. M/s. மணிமலர் மகப்பேறு மருத்துவமனை,
வைரமுத்து நாடார் தெரு,
அருப்புக்கோட்டை - 626 101. …எதிர்தரப்பினர்கள்

-----

மனு கோப்புக்கு எடுத்த நாள் : 28.11.2022
உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள் : 24.10.2024

------

இப்புகார் மனு இந்த ஆணையத்தில் கடந்த 08.10.2024-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் திரு. S. லோக நாதன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்தரப்பினர் தரப்பில் திரு. S. தமிழ்ப் பாலை மன்னன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை இவ்வழக்கு இந்த ஆணையத்தில் பரிசீலனையில் இருந்து, இன்று இந்த ஆணையம் வழங்கும்

**//உத்தரவு//**

**திருமதி.M.முத்துலட்சுமி,M.A.,B.L.,...உறுப்பினர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

இப்புகார் மனுவானது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019, பிரிவு 35ன் கீழ் புகார்தாரருக்கு எதிர்தரப்பினர்களின் மருத்துவ அஜாக்கிரரைக்கு இழப்பீடாக ரூ.1,00,25,000/-த்தையும், வழக்கு செலவுத் தொகையும் வழங்க உத்தரவிடக் கோரியும் புகார்தாரரால் இந்த ஆணையத்தில் புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

புகார்தாரர் 2019ம் ஆண்டில் இடது காலில் வலி ஏற்பட்டு மருத்துவர்களை அணுகிய போது நரம்பு பலவீனமடைந்ததாலும், (டென்சான்) தசை நாண்கள் சேதமடைந்திருப்பதாலும் வலி ஏற்படுவதால், 1ம் எதிர்தரப்பினரிடம் சிகிச்சைக்கு சென்றபோது, ஊசி போட்டு மருந்து மாத்திரைகளை பரிந்துரை செய்து பின் வலி குறைந்தது என்றும், மீண்டும் 6 மாதங்கள் கழித்து புகார்தாரர் கால்களில் வலி ஏற்பட்டதால் 1ம் எதிர்தரப்பினரை 2ம் எதிர்தரப்பினர் மருத்துமனையில் சந்தித்து இடதுகால் வலிக்கு சிகிச்சை பெற்ற பின்பும், வலி முழுமையாக குறையவில்லை என்றும், மீண்டும் ஜனவரி 2020 முதல் ஜுன் 2020 வரை புகார்தாரர் மதுரையில் உள்ள ஸ்போர்ட்ஸ் கிளினிக்கில் மருத்துவர் திரு. R. சுரேஷ்குமார் M.S.Ortho அவர்களிடம் சிகிச்சை பெற்ற போது இடது கணுக்காலில் தசை நாண்கள் கிழிந்து இருப்பதாக குறிப்பிட்டும் கடந்த 10.01.2020 முதல் 01.06.2020 வரை சிகிச்சை பெற்றார் என்றும், இடது காலில் வலிக்காக எடுக்கப்பட்ட எக்ஸ்-ரே படங்களை குறுந்தகட்டில் பதிவு செய்தும் கொடுத்துள்ளார் என்றும், கடந்த 22.10.2020ம் தேதி சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு பல்நோக்கு மருத்துவமனையில் வெளிநோயாளியாக புகார்தாரர் இடது கணுக்காலில் வலி இருப்பதாக குறிப்பிட்டதால் MRI ஸ்கேன் எடுத்து புகார்தாரரது இடது கணுக்காலில் தசை நாண்கள் கிழிந்து இருப்பதாகவும் அறுவை சிகிச்சை செய்யும்படியும் அறிவுறுத்தினர் என்றும், அதன்படி புகார்தாரர் 1ம் எதிர்தரப்பினரை அணுகி இடது காலில் ஏற்பட்டுள்ள தசை நாண் கிழிதலை சரி செய்ய அணுகியபோது 1ம் எதிர்தரப்பினர் உடனடியாக அறுவை சிகிச்சை ஆலோசனைபடி கடந்த 10.11.2020ம் தேதி அறுவை சிகிச்சைக்கு தேதி குறிக்கப்பட்டு மருத்துவமனையில் அட்மிட் ஆகும்படியும் இடது காலை

முழுவதுமாக நன்கு ஷேவ் செய்து சுத்தம் செய்து வரும்படி அறிவுறுத்தியதன்படி, இடது காலை ஷேவ் செய்து சுத்தம் செய்து 10.11.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனைக்கு சென்று முன்பணமாக ரூ.35,000/- ரொக்கமாக சிகிச்சை கட்டணமாக செலுத்தியும், அன்றைய தினமே புகார்தாரர் மயக்க மருந்து செலுத்தப்பட்டு அறுவை சிகிச்சையும் நடந்து 2 மணி நேரம் கழித்து புகார்தாரர் மயக்கம் தெளிந்து சுய நினைவு திரும்பி பார்த்த பொழுது தனது இடது காலில் சிகிச்சை ஏதும் செய்யாமல் சுத்தம் செய்யப்படாத வலது காலில் பெரிய கட்டு போட்டு இருப்பதை பார்த்தும் அதிர்ச்சியுற்று, எதிர்தரப்பினர்களிடம் விளக்கம் கேட்ட போது இடது காலை விட வலது கால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்ததால் வலது காலுக்கு உடனடி சிகிச்சை தேவை என்றபோது, புகார்தாரர் ஸ்கேன் எக்ஸ்ரே எடுக்காமல் எவ்வாறு வலது காலில் தான் அதிக பாதிப்பு என கண்டறிந்தீர்கள் எனக் கேட்டதற்கு தட்டிப்பார்த்தும் தொட்டுப்பார்த்தும் கண்டறிந்ததாகவும், 2 மாதம் கழித்து வந்து இடது காலுக்கு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும்படியும் கூறினார்கள் என்றும், இடது காலில் சேதமடைந்து வலி இருந்த நிலையில் வலது காலில் தவறுதலாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கட்டு போடப்பட்டதால் இரு கால்களையும் பயன்படுத்த முடியாமல் படுத்த படுக்கையாக மிகவம் அவதியுற்றதாகவும், பின்னர் திருச்சியில் உள்ள மேக்ஸ்கேர் மருத்துவமனையில் மருத்துவர் திரு.G.முகேஷ்மோகன் அவர்களிடம் பிப்ரவரி 2021ல் சிகிச்சைக்காக சென்றபோது அவரும் பரிசோதனை செய்துவிட்டு இடது கணுக்காலில் தான் அறுவை சிகிச்சை தேவைப்படுவதாக கூறி கடந்த 27.02.2021ம் தேதி உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டும், கடந்த 01.03.2021ம் தேதி இடது காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கடந்த 08.03.2021ம் தேதி விடுவிப்பு செய்யப்பட்டார் என்றும், எவ்வித முறையான சோதனையும் வலது காலில் செய்யப்படாமல் ஸ்கேன் ஏதும் செய்து பார்க்காமல் வலது காலில் அதிக பாதிப்பு என கண்டறிந்ததாக தவறான அறுவை சிகிச்சையை கவனக்குறைவாக 1,2 எதிர்தரப்பினர்கள் செய்த சேவைக்குறைபாட்டினால் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகுந்த பாதிப்பு உள்ளாகியுள்ளார் என்றும், எனவே புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு கோரி 1,2 எதிர்தரப்பினர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை கடந்த 12.04.2021ம் தேதி அனுப்பியும், அதற்கு ஜீலை மாதம் 2021ம் தேதி 1, 2 எதிர்தரப்பினர்கள் பதிலறிவிப்பு

அனுப்பியிருந்தனர் என்றும், 1.2 எதிர்தரப்பினர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு புகார்தாரர் தனது சென்னை செட்டிநாடு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட MRI ஸ்கேன் மற்றும் இதர பரிசோதனைகளை காட்டியும் இடது காலில் தான் வலி அதிகம் இருப்பதை குறிப்பிட்டும் தவறுதலாக சிகிச்சை அளிக்கப்பட்டு அதை நியாயப்படுத்த பரிசோதனை செய்ததில் இடது காலை விட வலது காலில் தான் அதிகம் பாதிப்பு எனக் கண்டறிந்ததாக எவ்வித முறையான ஆய்வும் செய்யாமல் கூறுவதும், புகார்தாரர் MRI ஸ்கேன் எடுக்க சம்மதிக்கவில்லை என்பதும், அறுவை சிகிச்சைக்கு முன்பு வெற்று பேப்பரில் பெறப்பட்ட கையெழுத்தை கொண்டு வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணங்களில் சாட்சி கையொப்பம் பெறப்படவில்லை என்றும், எனவே எதிர்தரப்பினர்களின் கவனக்குறைவு மற்றும் தவறினால் ஏற்பட்ட மருத்துவ சேவைக்குறைபாட்டிற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள புகார் மனுவை அனுமதிக்க வேண்டி பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

**<u>எதிர்தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:-</u>**

புகார்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், 1ம் எதிர்தரப்பினர் மருத்துவ கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியில் படித்து M.B.B.S., பட்டத்தையும், எலும்பியல் அறுவை சிகிச்சையில் மேற்படிப்பான D. Ortho., பட்டத்தையும், மருத்துவ கவுன்சிலின் அங்கீகாரத்துடன் எலும்பியல் அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவராக மருத்துவ சேவையை பல ஆண்டுகளாக செய்து வருகிறார் என்றும், 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனை தமிழ்நாடு அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அறுவை சிகிச்சை மையங்களில் ஒன்று என்றும், எலும்பியல் தொடர்பான அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் செய்வதற்கு தேவையான அனைத்து மருத்து வசதிகளையும் கொண்டதாகும் என்றும், புகார்தாரர் நவம்பர் 2020ல் 1ம் எதிர்தரப்பினரிடம் சிகிச்சை பெற வந்த போது புகார்தாரரை பரிசோதித்ததில் புகார்தாரருடைய உடல் வெப்பநிலை நார்மலாக இருந்ததுடன் அவருடைய சுவாச உறுப்புகள், நரம்பு மண்டலம் மற்றும் வயிறு ஆகியவையும் நல்ல நிலையில் இருந்தது என்றும், புகார்தாரரின் கால்களை பரிசோதனை செய்ததில் புகார்தாரருடைய இரண்டு கால்களுமே பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், புகார்தாரரின் வலது குதிகாலில்

அதிகமாக வலி இருப்பதாகவும், புகார்தாரரின் உடல் எடை அதிகமாக இருப்பதால் புகார்தாரரின் இரண்டு குதிகால் முட்டிகளுமே பாதிக்கப்பட்டுள்ளன என்றும், அதில் புகார்தாரரின் வலது கால்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், எனவே புகார்தாரரின் வலது காலுக்கு தான் முதலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதையும், 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரரிடம் விளக்கி கூறி, புகார்தாரரின் கால்களுக்கு ஆசுஐ ஸ்கேன் எடுக்க வேண்டும் என்று 1ம் எதிர்தரப்பினர் கூறியதை புகார்தாரர் ஏற்கவில்லை என்றும், மாறாக புகார்தாரர் மதுரை மற்றும் செட்டிநாடு மருத்துவர்களை கல்ந்து ஆலோசித்த போது புகார்தாரரின் இடது காலில் தான் முதலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறினார்கள் என்று புகார்தாரர் 1ம் எதிர்தரப்பினரிம் கூறியதாக புகார்தாரர் சொல்வது மறுத்தும், அதனை நிரூபிக்கும் வகையில் அந்த மருத்துவமனை மருத்துவர்கள் கொடுத்த OP Ticket ஆகியவற்றின் நகலினை காட்ட வேண்டியது புகார்தாரரின் கடமையாகும் என்றும், புகார்தாரரிடம் உள்நோயாளியாக சேர வரும்போது இடது காலில் ஷேவ் செய்து வரும்படி 1ம் எதிர்தரப்பினர் கூறியதாக புகார்தாரர் கூறியுள்ளது மறுக்கப்படுகிறது என்றும், புகார்தாரரை அறுவை சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பே புகார்தாரரின் வலது கால் மற்றும் இடது கால் ஆகியவற்றில் Tendo Calcaneus Tendinitis என்றும் வியாதி பாதிக்கப்பட்டிருந்தது 1ம் எதிர்தரப்பினரால் கண்டறியப்பட்டது எனவும், புகார்தாரரின் வலது காலில் தான் Tendo Calcaneus Tendinitis என்னும் வியாதி அதிகம் பாதிப்பு இருப்பது மருத்துவ பரிசோதனையில் 1ம் எதிர்தரப்பினரால் கண்டறியப்பட்டது எனவும், 1ம் எதிர்தரப்பினரின் ஆலோசனையினை புகார்தாரர் ஏற்றுக் கொண்டு வலது காலில் அறுவை சிகிச்சை செய்ய சம்மதித்தார். அத்தகைய அறுவை சிகிச்சையினால் புகார்தாரருக்கு ஏற்படக் கூடிய எதிர்பாராத சிக்கல்கள், ஆபத்துகள், அனைத்து மருத்துவ நூல்களிலும் குறிப்பிட்டுள்ள பின்விளைவுகளான Camplications - Infections, Delayed Union of Bones and Non Union of Bones ஆகியவைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பது குறித்தும், அதற்கு அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்பது குறித்தும் புகார்தாரருக்கும், அவரது உறவினர்களுக்கும் 1ம் எதிர்தரப்பினரால் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டு புகார்தாரரின் வலது காலில் அறுவை சிகிச்சை செய்வதற்கு புகார்தாரரிடம் சம்மதக் கடிதம் 10.11.2020ம் தேதி பெறப்பட்டது என்றும்,

அதன்பிறகு மயக்க மருந்து சிறப்பு மருத்துவர் புகார்தாரரை பரிசோதித்து மயக்க மருந்து கொடுப்பதனால் அரிதான எதிர்பாராத விளைவுகள் சில மயக்க மருந்தின் மூலமாக ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பது குறித்தும், அதற்கு மயக்க மருந்து சிறப்பு மருத்துவர் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்பது குறித்தும் புகார்தாரருக்கும், அவரது உறவினர்களுக்கும் மயக்க மருந்து சிறப்பு மருத்துவரால் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டு, புகார்தாரர் Fit for Anesthesia என்று கூறிய பின்பு புகார்தாரருக்கு அறுவை சிகிச்சை செய்ய மிகுந்த கவனத்துடன் மருத்துவ நூல்களில் குறிப்பிட்டுள்ளபடியும், மருத்துவ ரீதியாகவும், முறையான அறிவியல் கூற்றுப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை மிகவும் அனுபவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணரான 1ம் எதிர்தரப்பினரால் செய்யப்பட்டது என்றும், புகார்தாரருக்கு ஆன்டிபயாடிக் மருந்துகள் மற்றும் வலி நிவாரணி மருந்துகள் IV மூலம் சரியான அளவில் சரியான முறையில் புகார்தாரரின் வலது காலில் அறுவை செய்யப்பட்ட பகுதி குணமாகும் வரை 2ம் எதிர்தரப்பினரால் புகார்தாரருக்கு போடப்பட்டது என்றும், 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆன 14.11.2020ம் தேதியில் தான் புகார்தாரர் ரூ.35,214/-ஐ 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனையில் செலுத்தி ரசீது பெற்றுள்ள நிலையில், அந்த தொகையினை திருப்பி கொடுக்கும்படி 1ம் எதிர்தரப்பினரிடம் 10.11.2020ம் தேதியில் கேட்டதாக கூறியுள்ளது மறுக்கப்படுகிறது என்றும், புகார்தாரரின் வலது காலில் அறுவை செய்யப்பட்டது தவறு எனக் கூறினார்கள் எனவும், புகார்தாரருக்கு 1ம் எதிர்தரப்பினர் எந்த பரிசோதனையும் செய்யாமல் ஸ்கேன் கூட எடுக்காமல் தவறாக 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரரின் வலது காலில் அறுவை சிகிச்சை செய்ததால் கடந்த ஐந்து மாதங்களாக புகார்தாரர் படுத்த படுக்கையாக இருக்கிறார் எனவும், தேவையில்லாத வேதனையை அனுபவித்து வருவதை மறுக்கப்படுகிறது என்றும், புகார்தாரரின் வலது கால் மற்றும் இடது கால் என இரண்டிலுமே Archilles Tendinitis என்ற நிலை உள்ளது என்பதை பரிசோதனைகள் மூலம் 1ம் எதிர்தரப்பினர் கண்டறிந்து புகார்தாரரின் ஒப்புதலுக்கு பின்பு அவரது வலது காலில் 1ம் எதிர்தரப்பினர் முறையாகவும், சரியாகவும் அறுவை சிகிச்சை செய்துள்ள நிலையில் 1ம் எதிர்தரப்பினர் கவனக் குறைவாகவும், அலட்சியமாகவும், புகார்தாரருக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளதாக புகார்தாரர் கூறியிருப்பது தவறானது என்றும், புகார்தாரருக்கு வலது

காலில் ஏற்பட்டிருந்த பாதிப்புகளை 1ம் எதிர்தரப்பினர் அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தியதால் புகார்தாரர் பூரண நலம் பெற்று வீட்டிற்கு 14.11.2020ம் தேதி டிஸ்சார்ஜ் செய்து அனுப்பப்பட்டார் என்றும், 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரருக்கு செய்த மருத்துவ வழிமுறைகள் மூலம் 1ம் எதிர்தரப்பினர் தன் கடைமையை முறையாக செய்துள்ளார் என்றும், புகார்தாரர் மதுரையில் உள்ள மருத்துவர்களிடமும், சென்னையில் உள்ள செட்டிநாடு மருத்துவமனையிலும், அதனைத் தொடர்ந்து திருச்சியிலுள்ள மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளதால் மேற்படி மருத்துவர்கள் அசல் வழக்கினை முடிவு செய்வதற்கு அவசியமான கட்சிக்காரர்களாக சேர்க்காத காரணத்தினால் புகார் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 1ம் எதிர்தரப்பினர் 10.11.2020ம் தேதியில் செய்த அறுவை சிகிச்சையிலும், அதனைத் தொடர்ந்து வழங்கிய மருத்துவ சிகிச்சையிலும் எந்தவிதமான மருத்துவக் கவனமின்மையோ, சேவைக் குறைபாடோ ஏற்படவில்லை என்றும், 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு விரிவான பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதால் புகார்தாரருக்கு எவ்வித மனஉளைச்சலும், பண இழப்பும் ஏற்படவில்லை என்றும், புகார்தாரர் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், புகார் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

புகார்தாரர் தரப்பில் நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, அத்துடன் Ex A1 முதல் Ex A12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் எழுத்து மூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 1 மற்றும் 2 எதிர்தரப்பினர்கள் தரப்பில் எதிருரை, நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அத்துடன் Ex B1 முதல் Ex B3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்தரப்பினர் தரப்பில் புகார்தாரரிடம் எழுத்துபூர்வ விசாரணைக் கேள்விகள் கேட்டும் புகார்தாரர் தரப்பில் பதில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, எதிருரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில், இந்த ஆணையம் கீழ்க்கண்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>இப்புகார் மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்:-</u>**

1) புகார்தாரர் 1ம் எதிர்தரப்பினர் மீது சுமத்தும் மருத்துவ அஜாக்கிரதை மற்றும் சேவைக்குறைபாடு உரிய முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?
2) புகார்தாரருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் என்ன?

**<u>பிரச்சனைகள் 1 மற்றும் 2-க்கான தீர்வு:</u>**

இருதரப்பு மனு, எதிருரை, ஆவணங்கள், வாதங்கள், விசாரணை கேள்விகள் - பதில்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. 1 மற்றும் 2 எதிர்தரப்பினர்களின் கணவன் - மனைவி உறவு இருக்கும் மருத்துவர்கள். புகார்தாரர் தனக்கு இடது காலில் தொடர்ந்து வலி இருந்து வருவதால் 2019ம் ஆண்டில் எதிர்தரப்பினர்களை அணுகி தன் இடது கணுக்கால் வலி மற்றும் நடக்க ஏற்படும் சிரமம் குறித்து மருத்துவ ஆலோசனைக் கேட்டபோது ஊசியும், மாத்திரைகளும் பரிந்துரை செய்தார் என்றும், மேற்படி இடது கணுக்கால் வலி முழுமையாக சரியாகாத நிலையில், புகார்தாரர் மதுரையில் உள்ள ஸ்போர்ட்ஸ் கிளினிக்கில் மருத்துவர் R. சுரேஷ்குமார் M.S.Ortho அவர்களிடம் சிகிச்சை பெற்ற போது (10.01.2020 முதல் 01.06.2020) செய்யப்பட்ட பரிசோதனையில் புகார்தாரருக்கு இடது கணுக்காலில் தசை நாண்கள் கிழிந்து இருப்பதாக அறிவுறுத்தப்பட்டது Ex A1, Ex A2, Ex A3 ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. புகார்தாரர் மீண்டும் வலி வேதனைக் குறித்த மருத்துவ ஆலோசனைக்காக கடந்த 22.10.2020ம் தேதி சென்னை, கேளம்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு பல்நோக்கு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்ற போது, MRI (Magnetic Resonance Imaging) ஸ்கேன் எடுத்து புகார்தாரரின் இடது கணுக்கால் தசை நாண்கள் கிழந்து இருப்பதாகவும், அறுவை சிகிச்சை செய்யும்படி அறிவுறுத்தப்பட்டது Ex A 4, Ex A5 ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

பின்னர் புகார்தாரர் தன் சொந்த ஊருக்கு திரும்பியதும் 1ம் எதிர்தரப்பினரை அணுகி இடது கணுக்காலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விவரித்து தனக்கு உடனடியாக இடது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்ய கேட்டதின்படி 10.11.2020ம்

தேதி அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

புகார் மனுவின் சாரம்சமே, புகார்தாரர் தனக்கு இடது கணுக்காலில் வலி தொடர்ந்து இருப்பதையும் அது குறித்த ஏற்கனவே எடுத்துள்ள மருத்துவ அறிக்கைகளுடன் 1ம் எதிர்தரப்பினருக்கு காட்டி, தனக்கு இடது கணுக்கால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டி 1ம் எதிர்தரப்பினரை, 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனை பெற்று, அதன்படி 1ம் எதிர்தரப்பினரும் இடது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்வதாக ஒப்புக்கொண்டு மேற்படி 10.11.2020ம் தேதி 1ம் எதிர்தரப்பினர் தனது கவனமின்மை, அஜாக்கிரதையால் புகார்தாரரின் இடது கணுக்காலுக்கு பதில் வலது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்பதாகும்.

மேற்படி புகார்தாரரின் குற்றச்சாட்டினை மறுக்கும் விதமாக எதிர்தரப்பினர்களின் Ex B1 ஆவணத்தின் பக்கங்களின்படி, **"அறுவை சிகிச்சை ஒப்புகை சீட்டு தேதி 10.11.2020" என்று குறிப்பிட்டுள்ள பக்கத்தில் எழுதப்பட்ட வரிகள் பின்வருமாறு:**

**"திரு.S. காசிவேல், த/பெ. திரு. சங்கரலிங்கம் மருத்துவ பரிசோதனையில் வலது மற்றும் இடது கணுக்கால்களில் டென்டோ கால்கேனியஸ் டென்டினைட்டிஸ் என்னும் வியாதியால் பாதிக்கப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டது. வலது கணுக்காலில் மருத்துவ பரிசோதனையில் அதிகம் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. மயக்க மருந்து கொடுத்து வலது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள சம்மதம் அளிக்கின்றேன். மயக்க மருந்து செலுத்தும் முறை, அறுவைச் சிகிச்சையின் பொழுது ஏற்படும் பின்விளைவுகள், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னால் உடலில் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைப் பற்றி மருத்துவர் கூற அறிந்து கொண்டேன். பின் விளைவுகளுக்கு மருத்துவமனை நிர்வாகமோ, மருத்துவர்களோ பொறுப்பு அல்ல என்பதையும் தெரிந்து கொண்டேன்."** என்று கையால் எழுதப்பட்டு புகார்தாரரிடம் கையெழுத்து பெற்றுள்தை இந்த ஆணையம் கவனத்துடன் பரிசீலிக்கிறது. இந்த ஒப்புதல் சீட்டில் 1ம் எதிர்தரப்பினர் சமர்ப்பித்திருந்ததுபோல் புகார்தாரர்/நோயாளி உறவினர்களிடம் கூட்டு கையெழுத்து பெறப்படவில்லை என்பதும் அறியமுடிகிறது. மேற்படி ஒப்புதல் கடிதத்தின்படி 1ம்

எதிர்தரப்பினர் எத்தகைய - எந்தவிதமான மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி வலது மற்றும் இடது கணுக்கால்களில் Tendo Calcaneus Tendinitis என்னும் வியாதியால் பாதிக்ப்பட்டிருப்பது அதிலும் வலுது கணுக்கால் அதிகம் பாதிப்பு இருப்பதை கண்டறிந்து புகார்தாரருக்கு வலது கணுக்கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்ற 1ம் எதிர்தரப்பினரின் கூற்றை நிரூபிக்கும் வகையில் உரிய முறையில் 1ம் எதிர்தரப்பினர் நிரூபணம் செய்யவில்லை என்று இந்த ஆணையம் கருதுகிறது.

மேற்படி புகார்தாரர் MRI ஸ்கேன் எடுக்க சம்மதிக்கவில்லை என்று சமாப்பிக்கும் 1ம் எதிர்தரப்பினர் 10.11.2020ம் தேதியில் புகார்தாரரின் கணுக்கால்கள் குறித்த எந்த ஒரு மருத்துவ பரிசோதனை அறிவிப்பின் அடிப்படையில் புகார்தாரருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டார் என்ற எழுவினாவிற்கு எதிர்தரப்பினர்களிடம் எந்தவொரு தெளிவான நிலைபாடு இல்லை என இந்த ஆணையம் கருதுகிறது.

புகார்தாரர்/நோயாளி MRI பரிசோதனைக்கு செலவு செய்ய முடியவில்லை, சம்மதிக்கவில்லை என்ற 1ம் எதிர்தரப்பினரின் நிலைபாடு ஏற்புடையதாக இல்லை. புகார்தாரர் தன் மருத்துவ அறுவை சிகிச்சைக்காக எதிர்தரப்பினர்கள் மருத்துவமனைக்கு Surgery Fees - ரூ.11,000/- Anesthetist Fees -ரூ. 5,000/-ம், Assistant Surgeon Fees ரூ.3,000/-ம் (மாத்திரை செலவுகள் நீங்கலாக) செலுத்தியுள்ளது Ex A8 ஆவணத்தின்படி தெரியவருகிறது. அதன்படி, இத்துணை செலவு செய்த புகார்தாரர் MRI பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை என்ற 1ம் எதிர்தரப்பினரின் நிலைபாடு ஏற்புடையதாக இல்லை. அந்த கூற்றினை இந்த ஆணையம் ஏற்கவில்லை.

மேலும் Ex A6ன் படி 1ம் எதிர்தரப்பினரால் புகார்தாரருக்கு 14.11.2020ம் தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி (Discharge Summary) ஆகும். ஒரே ஒரு பக்கம் கொண்ட மேற்படி Ex A6ல், 1ம் எதிர்தரப்பினர் எந்த ஒரு வரியிலும் Right Leg Ankle/ வலது கணுக்காலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்ற வாசகம் குறிப்பிடவில்லை.

புகார்தாரரின் MRI Report (22.10.2020) (Ex A4)யை வைத்து 1ம் எதிர்தரப்பினர், புகார்தாரரின் அறுவை சிகிச்சையை முடிவெடுத்திருந்தாலும், அதன்படியும் இடது

கணுக்காலுக்கு அறுவை சிகிச்சை செய்யாமல் அவசர கதியில் முற்றிலும் அஜாக்கிரதையாக வலது கணுக்காலில் செய்திருப்பது தெளிவாகிறது.

புகார்தாரர், 1ம் எதிர்தரப்பினரை மருத்துவ சிகிச்சைக்கு - ஆலோசனைக்கு அணுகியபோது MRI எடுக்க மறுத்துவிட்டார் என்ற கூற்றினை ஒரு விவாதத்திற்கு ஏற்றாலும் கூட, புகார்தாரர் தனக்கு இடது கணுக்காலில் உள்ள வலி வேதனையை விவரித்திருக்கும்பட்சம், 1ம் எதிர்தரப்பினர் எந்த ஒரு தேவையான பரிசோதனையை மேற்கொள்ளாமலும் வலது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்திருக்கும் 1ம் எதிர்தரப்பினரின் நிலைபாடு மேற்கொண்ட மருத்துவ முறைகள் தவறானது என்றே இந்த ஆணையம் கருதுகிறது.

புகார்தாரருக்கு வலது கணுக்காலில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சையில் மருத்துவ அலட்சியம் (Medical Negligence) குறித்த விவாதத்திற்குள் இந்த ஆணையம் பரிசீலிக்க வேண்டியது இல்லை என்றும், அறுவை சிகிச்சையின் முதல் கட்டமாக நோயாளியை (புகார்தாரர்) என்ன காரணத்திற்காக தன் மருத்துவமனையில் அனுமதித்து, நோயாளியின் (நோய் - வலி) தரப்பை கேட்டறிந்து மருத்துவ ஆலோசனைப்படி செய்திருக்க வேண்டிய ஒரு சராசரியான முறையைக்கூட பின்பற்றாமலும், புகார்தாரர், 1ம் எதிர்தரப்பினர் அணுகியது முதல் இடது கணுக்கால் பிரச்சினையை விளக்கியிருக்கும் பட்சம், முழுமையான அஜாக்கிரதையால் (Carelessness) தவறாக கால் மாற்றி அறுவை சிகிச்சை செய்துவிட்டு அதை மறைக்க (Ex B1 = Ex A12) அறுவை சிகிச்சை ஒப்புதல் சீட்டு 1ம் எதிர்தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்தரப்பினர், புகார்தாரருக்கு வழங்கியுள்ள மருத்துவ விடுப்பு (Discharge Summary Ex A6) ஆவணத்தினை “காலியான - ஓட்டை பானை”/ Blunt document என்றே இந்த ஆணையம் கருதுகிறது.

புகார்தாரர் நிருபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்த ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ள Ex A2, Ex A3 (CD)யை 1ம் எதிர்தரப்பினர் தரப்பில், மேற்படி CD-க்கள் முறையாக இந்திய சாட்சிய சட்டத்தின்படி (Indian Evidence Act) தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி CD-க்களை ஆவணங்களாக ஏற்கக்கூடாது என்று

சமர்ப்பிக்கப்பட்டது. புகார்தாரரின் Ex A2, Ex A3 ஆவணங்களை புகார்தாரர் இந்த புகார் மனுக்காக தனிப்பட்ட முறையில் உருவாக்கியும் அதை புகார்தாரர் தரப்பு சாட்சியாக குறியீடு செய்ய முன்வரவில்லை. புகார்தாரர் மதுரையில் உள்ள ஸ்போர்ட்ஸ் கிளினிக் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது 10.01.2020 மற்றும் 01.06.2020 தேதிகளில் மேற்படி மருத்துவமனையில் அளித்த குறுந்தகட்டைதான் புகார்தாரர் தனது சான்றாவணமாக (Ex A2, Ex A3) குறியீடு செய்துள்ளதால் இந்திய ஆவண சட்டத்தின்படி தனியாக ஆணையத்தில் மனு செய்து அனுமதித்து பெற்ற பின்பு தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டும் என்ற 1ம் எதிர்தரப்பினர் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

1ம் எதிர்தரப்பினர் தரப்பில் புகார்தாரரிடம் கேட்கப்பட்டுள்ள குறுக்கு விசாரணை கேள்விகள் - புகார்தாரரின் பதில்கள் இந்த ஆணையம் பரிசீலித்தது. கேள்வி எண். 4,5,6,7,8,9 அதற்குண்டான பதில்களில் புகார்தாரர் தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்துள்ள Ex A2, Ex A3 (CD-குறுந்தகடுகள்) பற்றிய விவரங்கள் தெரியவருகிறது. அதுபோல் கேள்வி எண். 18,19 அதற்குண்டான பதில்களில் புகார்தாரர் தனக்கு இடது கணுக்காலுக்கு பதில் வலது கணுக்காலில் 1ம் எதிர்தரப்பினர் தவறாகத்தான் அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்பதை உறுதிபடுத்தியுள்ளார். அதன்படி புகார்தாரர் தரப்பு ஆவணம் Ex A1, Ex A2, Ex A3, Ex A4, Ex A5 அனைத்தும் 1ம் எதிர்தரப்பினர், புகார்தாரருக்கு கணுக்கால் அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு புகார்தாரரின் இடது கணுக்கால் வலியின் பிரச்சினைகள் குறித்து எடுக்கப்பட்ட மருத்துவ குறிப்பு - அறிக்கைகள் ஆகும். மேற்படி மருத்துவ அறிக்கைகளை புகார்தாரர், 1ம் எதிர்தரப்பினரிடம் காட்டியும், தனது இடது கணுக்கால் வலியை போக்க வேண்டி அணுகியபோது, புகார்தாரரின் பிரச்சினையை அறிந்தும் அஜாக்கிரதை, கவனக்குறைவால் 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரரின் வலது கணுக்காலுக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளது 1ம் எதிர்தரப்பினரின் கவனக்குறைவு, தவறு, அஜாக்கிரதை என்றே இந்த ஆணையம் கருதுகிறது. புகார்தாரர் தன் புகார்மனுவின்படி 1ம் எதிர்தரப்பினரின் மீது சுமத்தியுள்ள கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை, மருத்துவ தவறு (Blunder Mistake) ஆகியவற்றை உரிய முறையில் சான்றாவணங்களோடு நிரூபித்துள்ளார் என்றே இந்த ஆணையம் கருதுகிறது. அதன்படி புகார் மனுவினை அனுமதித்து பிரச்சினைகள் 1 மற்றும் 2க்கான தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இந்த புகார் மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. எதிர்தரப்பினர்களின் மருத்துவ சேவைக்குறைபாட்டினால் புகார்தாரருக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள், மனஉளைச்சல் மற்றும் பண விரையத்திற்கு இழப்பீடாக ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மற்றும் வழக்கு செலவுத் தொகையாக ரூ.5,000/-யை (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இந்த உத்தரவு பிறப்பித்த நாளிலிருந்து 4 வார காலத்திற்குள் புகார்தாரருக்கு, எதிர்தரப்பினர்கள் சேர்ந்தோ, தனித்தோ வழங்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மேற்படி தொகைகளில் வழக்கு செலவு தொகை நீங்கலாக உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து 9% வருட வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இது என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து - தட்டச்சரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்பு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 24ஆம் நாள் அக்டோபர் 2024-ம் வருடம் உத்தரவு பகரப்பட்டது.

**-ஒப்பம்-**
**உறுப்பினர்**

**-ஒப்பம்-**
**தலைவர்**

**புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள்:-**

| வ.எண் | தேதி | விவரம் | Exhibits |
|---|---|---|---|
| 1 | 10.01.2020 - 01.06.2020 | ஸ்போர்ட் கிளினிக்கில் சிகிச்சை பெற்றதற்கான குறிப்பு எழுதப்பட்ட சீட்டு - அசல். | Ex A1 |
| 2 | 10.01.2020 | ஸ்போர்ட் கிளினிக்கில் வழங்கப்பட்ட குறுந்தகடு - அசல். | Ex A2 |
| 3 | 01.06.2020 | ஸ்போர்ட் கிளினிக்கில் வழங்கப்பட்ட குறுந்தகடு - அசல். | Ex A3 |
| 4 | 22.10.2020 | சென்னை செட்டிநாடு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட MRI ஸ்கேன் ரிப்போர்ட் - அசல். | Ex A4 |
| 5 | 22.10.2020 | சென்னை செட்டிநாடு மருத்துவமனையில் வழங்கப்பட்ட குறிப்பு எழுதப்பட்ட சீட்டு - அசல். | Ex A5 |
| 6 | 14.11.2020 | எதிர்தரப்பினர் வழங்கிய மருத்துவ விடுப்பு அறிக்கை - அசல். | Ex A6 |
| 7 | 14.11.2020 | மருந்து பில் - அசல். | Ex A7 |
| 8 | 14.11.2020 | சிகிச்சை கட்டணபில் - அசல். | Ex A8 |

| | | | |
|---|---|---|---|
| 9 | 08.03.2021 | மேக்ஸ் மருத்துவமனை திருச்சி வழங்கிய மருத்துவ விடுப்பு அறிக்கை மற்றும் பில் - அசல். | Ex A9 |
| 10 | 12.04.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல். | Ex A10 |
| 11 | 22.04.2021 | இடைகால பதிலறிவிப்பு - அசல். | Ex A11 |
| 12 | ஜுலை 2021 | பதிலறிவிப்பு - அசல். | Ex A12 |

**<u>1ம் எதிர்தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள்:-</u>**

| வ.எண் | தேதி | விவரம் | Exhibits |
|---|---|---|---|
| 1 | 10.11.2020 முதல் 14.11.2020 21.11.2020 02.12.2020 | புகார்தாரருக்கு 2ம் எதிர்தரப்பினர் மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பான Case Sheet மற்றும் புகார்தாரர் அறுவை சிகிச்சைக்கு அளித்த சம்மதக் கடிதம் - நகல். | Ex B1 |
| 2 | 12.02.2021 | புகார்தாரர் 1ம் எதிர்தரப்பினருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - நகல். | Ex B2 |
| 3 | ஜுலை 2021 | 1ம் எதிர்தரப்பினர் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விரிவான பதில் அறிவிப்பு - நகல். | Ex B3 |

**-ஒப்பம்-**
**உறுப்பினர்**

**-ஒப்பம்-**
**தலைவர்**